# கனடியத் தமிழர் நிகழ்வுகள்

## வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

# 21வது வருடாந்தப் பொதுக்கூட்டம்







வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 2016ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3600 Kingston Rd, Scarborough இல் அமைந்துள்ள Scarborough Village Recreation Centre மண்டபத்தில் திரு. சி. இளஞ்செழியன் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வழமைபோன்று குறிப்பிட்ட எண்ணிக்கையான பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். முதலில் இறை வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவர் கடந்த 20 ஆண்டுகளாகச் சங்கம் கடந்து வந்த பாதை பற்றியும் தற்போது சங்கத்தினால் செயற்படுத்தப்படும் அர்த்தமுள்ள நீண்டகாலச் செயற்திட்டங்கள் பற்றியும் இதனால் தற்போது கல்லூரியும் மாணவர்களும் அடைந்துவரும் நன்மைகள் பற்றியும் விபரமாக எடுத்துரைத்தார். பின்னர் நடைபெற்ற எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடலின்போது பழைய மாணவர்கள் சங்கத்தின் வளர்ச்சி பற்றியும் குறிப்பாகக் கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சங்கம் ஆற்றி வரும் அளப்பரிய சீரிய பணிகள் பற்றியும் தங்கள் எண்ணக்கருத்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததோடு தொடர்ந்தும் இப்பணிகள் வழமைபோல் எதுவித தொய்வுமின்றித் தொடரவேண்டும் என்றும் அந்தவகையில் செயற்திறன் மிக்க நிர்வாகத்திற்குத் தொடர்ந்தும் தங்கள் முழு ஆதரவும் பங்களிப்பும் தொடரும் என்பதனையும் மிகத்தெளிவாக உரைக்கத் தலைப்பட்டார்கள். சமுதாய நலன் நோக்கி உழைக்க முன்வருவோர் தன்னலத்தையும் விட சமூகத்தின் நலத்தையே முதன்மைப்படுத்த வேண்டும் என்ற உயரிய பண்பைப் பின்பற்றி நிர்வாகத்தை

வழிநடாத்திவரும் ஆளுமைமிக்க தலைமை இன்றைய நிலையில் தொடர்ந்தும் வேண்டும் என்ற தங்களது ஆவலையும் விருப்பத்தையும் ஒருமனதாக வெளிப்படுத்தினர். நிறைவாக சுவையகம் நிறுவனத்தினரின் அறுசுவை உணவுடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் 2016-2017 ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பொதுச்சபையினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சி. இளஞ்செழியன் (தலைவர்)
கு. கலயாணசுந்தரன் (உபதலைவர்)
ச. மேகவர்ணன் (செயலாளர்)
க. சிவகுமார் (உப செயலாளர்)
ச. சிறிதரன (பொருளாளர்)

பொ. பாலசுந்தரம், பொன் பஞ்சலிங்கம், பிரபு பொன்னம்பலம், K. S. கதிர்காமநாதன், க. பாஸ்கரன், லோகன் சுந்தரம், சி. மகாபூரணன், இ. உருத்திரகாந்தன், தி. இளமுருகன், இ. திருவாரூரன், இ. பாலச்சந்திரன் (கணக்குப்பரிசோதகர்)

*பிற்குறிப்பு: சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல்*
*எதிர்வரும் யூலை மாதம் 31ம் திகதி*
*ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.*
*மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.*